அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் : 98/2016
தேதி : 22/05/2016

# தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுக்கு

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர்

## திரு.ஆர்.சரத்குமார் அவர்கள் வாழ்த்துச் செய்தி

தமிழகத்தில் 1984 ஆம் ஆண்டுக்கு பிறகு அடுத்தடுத்து ஆட்சி பீடத்தில் அமரும் வரலாற்று சாதனையை நிகழ்த்தி 6 வது முறையாக முதலமைச்சர் பதவி ஏற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும், அவர் தலைமையில் பொறுப்பேற்கும் அமைச்சர் பெருமக்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தின் அரசியல் வரலாற்றில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் தனிப்பெரும் கட்சி என்பதும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் தனிப்பெரும் சக்தி என்பதும் மீண்டும் இந்த தேர்தல் வெற்றி மூலம் நிரூபணம் ஆகியுள்ளது. கடந்த 5 ஆண்டு காலம் நடந்த நல்லாட்சி மீண்டும் தொடர வேண்டும் என்ற நம்பிக்கையில், எதிர்பார்ப்பில் தமிழக மக்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு ஏகோபித்த ஆதரவை தெரிவித்து மகத்தான வெற்றி பெற வைத்திருக்கிறார்கள். மக்களின் நம்பிக்கையையும், எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றும் விதமாக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில் அமைந்திருக்கும் அரசு, தொடர்ந்து நல்லாட்சி தந்து தமிழகத்தை தொலைநோக்கு சிந்தனையுடன் முன்னேற்ற பாதையில் கொண்டு சென்று இந்தியாவிலேயே தமிழகத்தை வளர்ச்சிமிகு மாநிலமாக மாற்றி காட்டுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கும், தமிழக மக்களுக்கும் நிச்சயம் உண்டு. அந்த அடிப்படையில் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு மீண்டும் பாராட்டுகளையும், நல்வாழ்த்துகளையும் என் சார்பிலும் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

ஆர்.சரத்குமார்
தலைவர்